**பிப்ரவரி – 01**

# TNPSC துளிகள்

- பல்வேறு கோயில்கள் மற்றும் மடங்களைச் சேர்ந்த யானைகளுக்கான 48 நாட்கள் நடைபெற்ற வருடாந்திர புத்துணர்ச்சி முகாமானது மேட்டுப்பாளையத்தில் உள்ள தேக்கம்பட்டியில் நிறைவடைந்தது.
    - 2003 ஆம் ஆண்டு முதல் இந்து சமய அறநிலையத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் வருடாந்திர முகாமானது தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரான ஜெயலலிதாவால் அறிமுகப்படுத்தப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## போர் நினைவிடம் – நாகாலாந்து

- அசாம் ரைபிள்ஸ் படையானது நாகாலாந்தில் ஒரு ஒருங்கிணைந்த போர் நினைவிடத்தை கட்டமைத்துள்ளது.
- வடகிழக்கு மாநிலத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை எதிர்த்து நடைபெற்ற போரில் கொல்லப்பட்ட ராணுவம் மற்றும் அசாம் ரைபிள்ஸ் படையைச் சேர்ந்த 357 வீரர்களுக்காக இந்த நினைவிடமானது கட்டப்பட்டுள்ளது.
- நாகாலாந்தில் அமைந்துள்ள இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது நினைவிடம் இதுவாகும்.
- நாகாலாந்து மாநிலமானது கோஹிமாவில் புகழ்பெற்ற இரண்டாம் உலகப் போரின் கல்லறையான "வீர் சம்ருதியையும்" கொண்டுள்ளது.

### *அஸ்ஸாம் ரைபிள்ஸ்*

- அஸ்ஸாம் ரைபிள்ஸ் படையானது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இது இந்தியாவின் மிகப் பழமையான துணை ராணுவப் படையாகும்.
- 2000 ஆம் ஆண்டு முதல், இந்தப் படையானது இந்திய அரசின் "ஒரு எல்லை ஒரு படை" என்ற கொள்கையின் கீழ் இந்தோ - மியான்மர் எல்லையை பாதுகாத்து வருகின்றது.



## இந்திய மானுடவியல் ஆய்வு நிறுவனம்

- காந்தியின் 150வது பிறந்த நாளை நினைவுகூரும் வகையில், இந்திய மானுடவியல் ஆய்வு நிறுவனமானது (Anthropological Survey of India - AnSI) "பயன்பாட்டு மானுடவியல் பற்றிய காந்திய நுண்ணறிவு" என்ற தலைப்புக் கொண்ட தனது பத்திரிகையின் முழு வெளியீட்டையும் காந்திக்கு அர்ப்பணித்துள்ளது.
- AnSI ஆனது மனித மற்றும் கலாச்சார அம்சங்களுக்கான மானுடவியல் ஆய்வுகள் மற்றும் கள தரவு ஆராய்ச்சிகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள இந்திய அரசின் ஒரு தலைமை அமைப்பாகும்.
- இது 1945 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் உருவாக்கப்பட்டது.
- இது கலாச்சார அமைச்சகத்தின் கீழ் வருகின்றது.

## காவல்துறை தொடர்பான குடிமக்களை மையமாகக் கொண்ட 2 சேவைகள் – NCRB

- தேசிய குற்ற ஆவணக் காப்பகமானது (National Crime Record Bureau - NCRB) குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு அமைப்பு முறைத் தளங்கள் (Crime and Criminal Tracking Network System - CCTNS) மீதான காவல்துறை தொடர்பான குடிமக்களை மையமாகக் கொண்ட 2 சேவைகளைத் தொடங்கியுள்ளது. அவையாவன:
  - காணாமல் போன நபர்களைத் தேடுதல்,
  - வாகன NOCஐ (தடையில்லாச் சான்று) உருவாக்குதல்.

***காணாமல் போன நபர்களைத் தேடுதல்:***

- குடிமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து அடையாளம் தெரியாத நபர் / அடையாளம் தெரியாத இறந்த உடல்களின் தேசிய தரவுத் தளத்தில் உள்ள தரவுகளின் உதவியுடன் காணாமல் போன உறவினர்களைத் தேட இது அனுமதிக்கின்றது.

***வாகன NOCஐ (தடையில்லாச் சான்று) உருவாக்குதல்:***

- காவல்துறைப் பதிவுகளிலிருந்து சந்தேகத்திற்குரியதா அல்லது உண்மைத் தன்மையுடன் இருக்கிறதா என்று குடிமக்கள் ஒரு வாகனத்தை இரண்டாவது முறையாக வாங்குவதற்கு முன் அதன் நிலையை அறிய குடிமக்களை அனுமதிக்கின்றது.

***CCTNS பற்றி***

- CCTNS என்பது 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.
- இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்றது.

## தானியங்கி அடையாளம் மற்றும் தரவு சேகரிப்பு - இந்திய ரயில்வே

- இந்திய ரயில்வேவானது பாதுகாப்பு மற்றும் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ரேடியோ - அதிர்வெண் அடையாள (Radio-frequency identification - RFID) திட்டத்தை மேற்கொண்டுள்ளது.
- இது ரயில் பெட்டிகளின் தானியங்கி அடையாளம் மற்றும் தரவு சேகரிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய ரயில்வே துறையில் இந்த திட்டத்தைச் செயல்படுததுவதற்காக,
  - ரயில்வே தகவல் அமைப்புகளுக்கான மையம் (CRIS, இந்திய ரயில்வேயின் தகவல் தொழில்நுட்ப பிரிவு),

- ஜிஎஸ் 1 இந்தியா மற்றும்
- 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற முன்முயற்சியுடன் இந்தியத் தொழில் துறையும் ஒன்று சேர்ந்துள்ளது.

❖ ரயில் இருப்பு உணர்வி (Train Presence Detectors - TPDs), ரயில் தண்டவாள நிலை கண்காணிப்பு உபகரணங்கள் போன்ற பல்வேறு உபகரணங்களுடன் RFID உபகரணங்களை ஒருங்கிணைப்பதும் ஒரு முழுமையான தீர்வாக அமையும்.

# சர்வதேசச் செய்திகள்


## மேற்கு ஆசிய அமைதித் திட்டம்

❖ சமீபத்தில் மேற்கு ஆசிய அமைதித் திட்டமானது அமெரிக்க அதிபர் டிரம்ப்பால் வெளியிடப்பட்டது.

❖ இது இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையில் நிறுத்தப்பட்ட இரு நாட்டுப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடரத் திட்டமிட்டுள்ளது.

❖ இந்தத் திட்டத்தின் படி

- ஜெருசலேம் ஒன்றிணைந்ததாகவும் இஸ்ரேலின் தலைநகராகவும் இருக்க வேண்டும்.
- மேற்குக் கரையில் இஸ்ரேல் தனது சட்டவிரோத குடியேற்றங்கள் எதையும் அகற்றக் கூடாது.
- 1967 ஆம் ஆண்டுப் போரில் இஸ்ரேல் நாட்டினால் கைப்பற்றப்பட்ட நகரத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஜெருசலேமின் கோயிலான மவுண்ட் / அல் - ஹராம் அல் - ஷெரீப் வளாகத்தைப் பாதுகாக்கப்பட வேண்டும்.
- இணைக்கப்படாத மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனிய பிரதேசங்கள் மற்றும் காசா ஆகியவற்றிற்கு இடையே போக்குவரத்து இணைப்புகள் நிறுவப்பட வேண்டும்.
- பாலஸ்தீனிய மற்றும் அண்டை அரபு அரசு பொருளாதாரங்களை வலுப்படுத்துவதற்காக 50 பில்லியன் டாலர் முதலீட்டு நிதி உருவாக்கப்பட வேண்டும்.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## திரள் வெடிப்பு நிகழ்வு


- நமது அண்டத்தில் காலப்போக்கில் வெவ்வேறு விகிதங்களில் திரள் வெடிப்பு நிகழ்வு நடப்பதாக வானியலாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- திரள் என்பது ஈர்ப்பு விசையினால் ஏற்படும் பொருள்கள் சேகரிப்பின் மூலம் கிரகங்கள் மற்றும் பிற விண்வெளிக் கோள்கள் உருவாகும் நிகழ்வாகும்.
- சில நேரங்களில் உருவாகும் நட்சத்திரமானது ஒரு பெரிய அளவிலான பொருளை விழுங்குகின்றது. இதன் விளைவாக மிகப் பெரிய நட்சத்திரத்தில் வெடிப்பு நிகழ்வுகள் ஏற்படுகின்றன. இது திரள் வெடிப்பு நிகழ்வு என்று அழைக்கப்படுகின்றது.
- திரள் வெடிப்பு நிகழ்வானது முதன்முதலில் 2016 ஆம் ஆண்டில் கண்காணிக்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மேசர் கண்காணிப்பு அமைப்பானது ரேடியோ தொலைநோக்கிகளைப் பயன்படுத்தி இந்த நிகழ்வைக் கண்காணிக்கின்றது.



## ஸ்பிட்சர் தொலைநோக்கி

- நாசாவின் ஸ்பிட்சர் விண்வெளித் தொலைநோக்கியானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றது.
- நாசாவின் ஸ்பிட்சர் திட்டமானது அண்டத்தை அகச்சிவப்பு ஒளியின் மூலம் 16 ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வு செய்துள்ளது.
- ஸ்பிட்சர் விண்வெளித் தொலைநோக்கியானது 2003 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- நாசா ஆய்வுத் திட்டத்தின் கடைசித் திட்டம் இதுவாகும். 1990 மற்றும் 2003க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் தொடங்கப்பட்ட நான்கு தொலைநோக்கிகள் (ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி உட்பட) திட்டத்தை நாசா தொடங்கியுள்ளது.
- வெவ்வேறு அகச்சிவப்பு அலைநீளங்களைப் பயன்படுத்தி, ஸ்பிட்சர் தொலைநோக்கியானது அண்டத்தின் அம்சங்களை ஆய்வு செய்து, வெளிப்படுத்தியது.
- ஸ்பிட்சர் தொலைநோக்கியானது பொதுவாகப் பொருட்களிலிருந்து வெப்ப கதிர்வீச்சைக் குறிக்கும் அகச்சிவப்புக் கற்றையின் மீது கவனம் செலுத்துகின்றது.
- 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது ஸ்பிட்சர் தொலைநோக்கியினால் ஆய்வு செய்யப்பட்ட அதே அலை நீளங்களில் உள்ள பொருள்களைக் கொண்ட பிரபஞ்சத்தைப் பற்றி ஆய்வு

செய்ய இருக்கின்றது.




# மாநிலச் செய்திகள்

## கர்நாடக மூடநம்பிக்கை எதிர்ப்புச் சட்டம்

- மனிதாபிமானமற்ற தீய நடைமுறைகள் மற்றும் கருப்பு மாயச் சட்டம், 2017 என்ற ஒரு சட்டத்தை கர்நாடக மாநில அரசு முறையாக அறிவித்துள்ளது.
- இந்த மசோதா மூடநம்பிக்கை எதிர்ப்பு மசோதா என்று பிரபலமாக அறியப்படுகின்றது.
- மேட் ஸ்னனா என்ற மீதமுள்ள உணவை தலித்துகள் உண்ணும் நடைமுறையானது தற்பொழுது தன்னார்வமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த நடைமுறையில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டியதில்லை.
- மகாராஷ்டிரா மனிதப் பலியிடுதலைத் தடுத்தல் & ஒழித்தல் மற்றும் கருப்பு மாயச் சட்டம், 2013 ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மசோதாவானது தயாரிக்கப்பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சூரஜ்கண்ட் சர்வதேசக் கைவினைக் கண்காட்சி 2020

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதியன்று இந்தியக் குடியரசுத் தலைவரான ராம் நாத் கோவிந்த் 34வது சூரஜ்கண்ட் சர்வதேசக் கைவினைக் கண்காட்சியை ஹரியானாவின் ஃபரிதாபாத் நகரில் திறந்து வைக்க இருக்கின்றார்.
- இந்த மேளாவானது மத்திய சுற்றுலா, ஜவுளி, கலாச்சாரம் மற்றும் வெளி விவகாரங்கள் துறை அமைச்சகங்களுடன் இணைந்து சூரஜ்கண்ட் மேளா ஆணையம் & ஹரியானா சுற்றுலா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இந்தக் கண்காட்சியானது சுற்றுலாவை மேம்படுத்த உதவ இருக்கின்றது.
- சூரஜ்கண்ட் என்பது 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமையான நீர்த்தேக்கம் ஆகும். இது ஹரியானாவின் ஃபரிதாபாத் நகரில் ஆரவல்லி மலைத்தொடரின் தெற்கு தில்லி முனையில் அமைந்துள்ளது.
- 34வது சூரஜ்கண்ட் சர்வதேச கைவினை மேளா - 2020க்கான பங்களிப்பாளர் நாடு உஸ்பெகிஸ்தான் ஆகும்.
- இந்த மேளாவிற்கு இமாச்சலப் பிரதேச மாநிலமானது முதன்மை மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.





## நாகோபா ஜாத்ரா விழா

- நகோபா ஜாத்ரா திருவிழாவானது தெலுங்கானா மாநிலத்தில் மெஸ்ராம் ராஜ் கோண்டுகள் மற்றும் பர்தான்கள் ஆகிய பழங்குடி அமைப்பினரால் கொண்டாடப்பட்டது.
- நகோபா ஜாத்ரா என்பது இந்தியாவின் தெலுங்கானாவில் உள்ள அதிலாபாத் மாவட்டத்தில் கொண்டாடப்படும் ஒரு பழங்குடியினத் திருவிழாவாகும்.
- இது இரண்டாவது மிகப்பெரிய ஒரு பழங்குடியினத் திருவிழாவாகும்.

***கோண்டுகள்***

- கோண்டுகள் உலகின் மிகப்பெரிய பழங்குடி குழுக்களில் ஒன்றாகும்.
- கோண்டுகள் பின்வரும் நான்கு பழங்குடியினக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவையாவன:
    - ராஜ் கோண்டுகள்,
    - மடியா கோண்டுகள்,
    - துர்வே கோண்டுகள்,
    - கதுல்வார் கோண்டுகள்.
- இது ஒரு பட்டியலிடப்பட்ட பழங்குடியினக் குழுவாக அறிவிக்கப்பட்டுள்ளது.




# இதரச் செய்திகள்

## போக்குவரத்து நெரிசல் குறியீடு 2019

- வழிசெலுத்தல், போக்குவரத்து மற்றும் வரைபட பொருள்களை வழங்கும் நெதர்லாந்தைச் சேர்ந்த ஒரு சர்வதேச அமைப்பான டாம் டாம் ஆனது 2019 ஆம் ஆண்டின் போக்குவரத்து நெரிசல் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது போக்குவரத்து தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காக இருப்பிடத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது. இந்த அமைப்பானது ஒன்பது ஆண்டுகளாக நகரத் தரவரிசைகளை வெளியிட்டு வருகின்றது.









- அதிக ஓட்டுநர்களுடன் உலகின் அதிக போக்குவரத்து நெரிசல் மிக்க நகரமாக பெங்களூரு நகரம் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் மும்பை (4), புனே (5), புது தில்லி (8) ஆகியவை இந்திய நகரங்களில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன.
- இந்தக் குறியீட்டில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மணிலா, கொலம்பியாவிலிருந்து போகோடா, ரஷ்யாவிலிருந்து மாஸ்கோ, பெருவைச் சேர்ந்த லிமா, துருக்கியிலிருந்து இஸ்தான்புல் மற்றும் இந்தோனேசியாவிலிருந்து ஜகார்த்தா ஆகியவை முதல் 10

இடங்களில் இடம் பெற்றுள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★